# கொல்வின் ஆர். டி சில்வாவும் லெஸ்லி. குணவர்த்தனவும் சர்வதேச செயலகத்திற்கு எழுதிய கடிதம், ஏப்ரல் 13, 1954

April 13, 1954

அன்புள்ள தோழர்களுக்கு,

சர்வதேச நிறைவேற்றுக் குழு (IEC) உறுப்பினர்கள் கையெழுத்திடுவதற்கான ஒரு வரைவு விண்ணப்பம் இணைக்கப் பெற்ற உங்களது கடிதத்தை நாங்கள் பெற்றுக் கொண்டோம். தோழர் கொலின்ஸ் இன் எதிர்ப்பும் எங்களுக்கு கிடைக்கப் பெற்றிருக்கிறது. பின்வரும் காரணங்களுக்காக விண்ணப்பத்தில் நாங்கள் கையெழுத்திட முடியாத நிலை இருப்பதை நாங்கள் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்:

1. ஒரு ஒற்றை உலக காங்கிரசை உறுதிசெய்வதற்கான அடிப்படையாக இயக்கத்தின் முன்வைப்பதற்காக ஒரு தொகை முன்மொழிவுகளை இலங்கை பிரிவு ஏற்கனவே ஏற்றுக் கொண்டு விட்டிருக்கிறது. இந்த முன்மொழிவுகளை நாங்கள் வழிமொழிகிறோம். சர்வதேச செயலகத்தின் வரைவில் இருக்கும் முன்மொழிவுகள் இலங்கை பிரிவினது முன்மொழிவுகளில் இருந்து மாறுபட்டதாய் இருக்கின்றன.

2. வரைவு விண்ணப்பமானது உள்ளபடியே ஒரு கன்னை ஆவணமாக புரிந்து கொள்ளப்பட முடியும். உதாரணமாக, பின்வரும் பத்தியைப் பாருங்கள்: ‘நாங்கள் முன்கூட்டியே தெரிவித்துக் கொள்கிறோம், இந்த நெருக்கடியில் தோன்றியிருக்கக் கூடிய வெவ்வேறு போக்குகளும், அகிலத்தின் ஒழுங்கை அவை மதிக்கின்ற பட்சத்தில், ஏன் அதில் இணைந்து இருக்க முடியாது என்பதற்கான எந்த அரசியல் காரணத்தையும் நாங்கள் காணவில்லை, அத்துடன் இத்தகையதொரு உணர்வுடன், அகிலத்தின் பிரதிநிதித்துவ கூட்டங்கள் மற்றும் அதன் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட முன்னணி அமைப்புகளது அத்தனை முடிவுகளுக்கும் நாங்கள் கீழ்ப்படிந்து நடப்போம் என்பதையும் நாங்கள் தெரிவித்துக் கொள்கிறோம்.’

மேற்கூறிய பத்தியில் நாங்கள் அடிக்கோடிட்டுக் காட்டியிருக்கிறவாறாக இத்தகைய எந்த அறிவிப்பையும் செய்வது IEC க்கு முழுமையாக சம்பந்தமற்றதாகும்.

மேலும், இந்த விண்ணப்பமானது இடைநீக்கம் செய்யப்பட்ட பிரிவுகளது சாமானியக் காரியாளர்களுக்கு, அவர்களின் தலைவர்களது தலைக்கு மேலும் மற்றும் எதிரான விதத்திலும், விண்ணப்பம் செய்வதாக தென்படுகிறது. நமது இயக்கத்தில் இருக்கின்ற அத்தனை போக்குகளையும் பிரதிநிதித்துவம் செய்கின்ற ஒரு ஒற்றை உலக காங்கிரஸ் மூலமாய் இயக்கத்தின் மறுஇணைவு என்ற கையிலிருக்கும் உடனடிக் காரியமாக நாங்கள் கருதுகின்ற விடயத்திற்கு இது சரியான அணுகுமுறையாக நாங்கள் கருதவில்லை.

சகோதரத்துவத்துடன்,
கொல்வின் ஆர். டி சில்வா (IEC உறுப்பினர்)
லெஸ்லி குணவர்த்தன (மாற்று)



1- Letter from Colvin R. de Silva and L. Goonewardene to the IS, April 13, 1954